1990 ஏப்ரல் 26]

தனியார் துறையில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள்.

*5588 திரு. இளம்வழுதி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தனியார் துறையில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையை எதிர்த்து தனியார் துறை முதலாளிகள் நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கி இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே.என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) தனியார் துறையில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்று அரசால் ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. ஆனால், துப்புரவுத் தொழிலாளர்களை ஒப்பந்த முறையில் பணி நியமனம் செய்வதை 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டத்தின்கீழ் தடை செய்து அரசு ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையை எதிர்த்து சில நிர்வாகிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்றிருக்கின்றார்கள்.

(ஆ) அந்த ரிட் மனுக்களுக்கு எதிராக அரசுத் தரப்பில் எதிர் உறுதி வாக்குமூலம் (Counter affidavit) தயார் செய்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய, அரசு வழக்குரைஞர் அவர்களுடன் கலந்து, அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10-25 மணி

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அண்மையில் ஆல் இந்தியா லேபர் கமிஷனர்ஸ் கான்ஃபரன்சும், ஆல் இந்தியா லேபர் மினிஸ்டர்ஸ் கான்ஃபரன்சும் நடைபெற்றது. அதிலே அமைச்சர் அவர்கள் இதுபற்றி விவாதித்து இருக்கிறார்கள். இது குறித்து மத்திய அரசு சட்டம் கொண்டு வருமா ? கொண்டு வந்தால் அதை இந்த அரசு அமல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆல் இந்தியா லேபர் மினிஸ்டர்ஸ் கான்ஃபரன்சும் அதற்கு மறுநாள் ஆல் இந்தியா லேபர் கமிஷன்ர்ஸ்கான்ஃபரன்சும்

டில்லியில்நடைபெற்றது. அதில் தமிழ்நாடு அரசின் சார்பாக நான் கலந்து கொண்டேன். பல்வேறு பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டன. முக்கியமாக நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்கு என்று ஒரு விவாதமும், அதன் பிறகு தற்காலிகத் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கு சட்டம் போட வேண்டும் என்றும், இதுபோல பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் விவாதித்து, மத்திய அரசு இதற்கான தனி ஆணை பிறப்பிக்க இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு அப்படி ஆணை பிறப்பிக்குமானால் தற்காலிகப் பணியாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கு நமக்கு அது வகையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு முக்கியமான கேள்வி. ஈ. எஸ். ஐ., பி.எப், பென்ஷன் பெனிஃபிட்ஸ் போன்ற அடிப்படை வசதிகள் எல்லாம் இன்றைக்கு ஏழைத் துப்புரவுத் தொழிலாளர்களுக்குக் கிடைக்காமல் செய்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு வேலைக்கு ஆட்களை ஏற்பாடு செய்துவிடுகிறார்கள். இதனால் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்தான் கொள்ளை லாபம் அடைகிறார்களே தவிர, தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய உரிமைகளும் பாதிக்கப்படுகின்றன.எனவே ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு வேலைக்கு தனியார் நிறுவனங்கள் அமைக்கும் ஏற்பாட்டைத் தடுக்க சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம் இவர்களுக்காகப் போடப்பட்டு இருக்கின்றது. 50 பேர்களுக்கு மேல் வேலை செய்கின்ற இடத்தில் துப்புரவுத் தொழிலாளர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுவார்களேயானால் அது கூடாது என்று சட்டம் அரசின் சார்பாகப் போடப்பட்டு, அதில் 10 இடங்களிலே ஆய்வு செய்யப்பட்டு, இந்த அரசின் சட்டத்தை எதிர்த்து 10 கம்பெனிகள் கோர்ட்டிலே தடை உத்தரவு பெற்று இருக்கிறார்கள். அந்த 10 கம்பெனிகள் தவிர மற்ற இடங்களில் சட்டம் அமல்படுத்தப்பட்டு இருக்கின்றது. இதில் ஒரு சங்கடம் என்னவென்றால் தற்காலிகப் பணியாளர்களை நீக்க வேண்டுமென்று நமது தொழிலாளர் நலத் துறை நடவடிக்கை எடுத்தால், அவர்களை உடனடியாக வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். தற்காலிகப் பணியாளர்களை நீக்காமல் இருக்க நமது அரசிடம் சட்டம் இல்லை. அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று சட்டம் இருந்தால் அவர்களுக்கு உடனடியாக அரசு உதவும். அதற்காகத்தான் மத்திய அரசிலே இப்போது நடைபெற்ற கூட்டங்களிலே முடிவு செய்து இருக்கிறார்கள். இதற்காக ஒரு தனிச் சட்டம் கொண்டு

1990 ஏப்ரல் 26]

வருவதற்காக முடிவு செய்து இருக்கிறார்கள். அப்படி அது கொண்டுவரப்படுமானால் அவர்கள் அத்தனை பேரும் பயன் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

2. தகவல் கோரல்

(அ) ராதாபுரம் தொகுதியில் வட்டவிளை கிராமத்தில் ஒரு பெண் கொல்லப்பட்டது தொடர்பாக காவல் துறையினர் உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்து.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில் விமலா என்ற ஒரு பெண்மணி கொல்லப்பட்டு, காவல் துறையினர் சரிவர நடவடிக்கை எடுக்காத ஒரு சூழ்நிலை நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் அந்த ஊரில் இருக்கக்கூடிய பெரிய தனக்காரர் ஒருவருடைய மகனைக் காதலித்ததாகவும், அந்தக் காதலை விரும்பாத அந்தப் பெரிய மனிதர் ஆட்களை வைத்து அடித்து, அரளிக் கொட்டையை அரைத்து வாயிலே ஊற்றி தூக்கிப் போட்டுவிட்டதாகவும் அவருடைய தாயார் பஞ்சவர்ணத்தம்மாள் நேரில் இங்கே வந்து சொல்லிச் சென்று இருக்கிறார்கள். ஆகவே அதில் காவல் துறையினர் முறையாக உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று, அந்தத் தாயார் பஞ்சவர்ணத்தை மிரட்டி இனிமேல் வந்து எதுவும் சொல்லக் கூடாது என்றும் அனுப்பியதாகவும் சொல்கிறார்கள். ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதுபோன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆவன செய்து உரிய நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைத் தண்டிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் பாப்பா உமாநாத் அவர்கள் கூறிய இந்தத் தகவல் பற்றி விசாரித்து அறிந்ததில் வட்டவிளை கிராமம், ராதாபுரம் காவல் நிலையத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தென்கிழக்கே உள்ள கிராமம் ஆகும். அந்த கிராமத்தில் சுப்பிரமணிய நாடார் மகள் விமலா என்ற